Maalai Murasu

மாலை முரசு

21-05-2011

Page # 4

7 கண்டுபிடிப்புக்கு காப்புரிமை விண்ணப்பம்:

# எஸ்.எஸ்.என். பொறியியல் கல்லூரி சாதனை!

சென்னை, மே. 21-

சென்னையைச் சேர்ந்த எஸ்.எஸ்.என். பொறியியல் கல்லூரி, 7 புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி அவற்றிற்கு அறிவுசார் சொத்துரிமைச் சட்டத்தின் கீழ் காப்புரிமை கோரி விண்ணப்பித்துள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் தற்போது வரையிலான காலக்கட்டத்தில் இக்கல்லூரியில் ஆராய்ச்சித் துறை தலைவர் டாக்டர் வி.ராமசாமியின் தலைமையில் மின்னணு மற்றும் தொடர்பியல் (இ.சி.இ.) மற்றும் இயற்பியல் துறைகளின் ஆராய்ச்சியாளர்கள் இந்த புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கியுள்ளனர்.

## 25 திட்டப்பணிகள்

இக்கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சி திட்டங்களுக்காக நாட்டின் பல்வேறு அமைப்புகள் இதுவரை ரூ.4.80 கோடி வழங்கியுள்ளன. கல்லூரியில் ஆராய்ச்சித்துறை தொடங்கப்பட்ட 4 ஆண்டுகளுக்குள் ஏறத்தாழ 25 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.